வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06
06.02.2025 வியாழக்கிழமை
இதழ் : 37
பக்கங்கள் : 12




# புதிய அரசமைப்பொன்று அவசரம் தேவையில்லை!

## அநுர தலைமையிலான அரசு அறிவிப்பு



கொழும்பு, பெப்ரவரி 06

**நாட்டின் தற்போதைய நிலவரத்துக்கு இணங்க, பொருளாதாரத்தைப் பலப்படுத்தி நாட்டை ஸ்தீரப்படுத்துவதே பிரதான விடயமாகும். புதிய அரசமைப்பை அவசரமாக கொண்டு வரவேண்டிய தேவை தற்போது கிடையாது என்று அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.**

இது குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று கருத்து தெரிவிக்கையில்-

அரசியலமைப்பில் மாற்றமொன்று எமக்கு வழங்கப்பட்டுள்ள மக்கள் ஆணைக்கு இணங்க நிச்சயமாக இடம்பெறும். ஆனால், அவசர அவசரமாக அரசமைப்பொன்றை உருவாக்க நாம் தற்போது நடவடிக்கை எடுக்கப் போவதில்லை.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டரை மாதங்கள்தான் ஆகின்றன. எமக்கு பொருளாதார சவாலை நிவர்த்தி செய்யவேண்டிய பிரதான தேவை உள்ளது. முதலில் நாட்டின் பொருளாதாரத்தை சீரான நிலைமைக்கு கொண்டுவர வேண்டும். இதற்கு இன்னும் சில காலங்கள் எடுக்கும்.

சர்வதேச ரீதியாகவும் சில சவால்கள் காணப்படுகின்றன. எனினும், நேரத்தை இழுத்தடிக்காமல், உரிய காலத்தில் புதிய அரசியலமைப்பை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுப்போம். இப்போதே அனைத்தையும் செய்து குழப்பிக் கொள்ளத் தேவையில்லை - என்றார்.

(அ)



## பாராளுமன்றில் ஒன்றுகூடிய எதிர்க்கட்சிகளின் எம்.பிக்கள்

கொழும்பு, பெப். 06

பாராளுமன்ற விவகாரங்கள் உட்பட எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பிலான முக்கிய கலந்துரையாடலொன்று எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று பாராளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

பாராளுமன்றத்திலும் வெளியிலும் கூட்டாக இணைந்து செயல்படுவது தொடர்பாக எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் 11

## உள்ளூராட்சித் தேர்தலை ஏப்ரல் 24 இல் நடத்தலாம்!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, பெப். 06

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி நடத்த முடியும் சபைத் தலைவரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த சட்ட மூலம் தொடர்பில் எதிர்வரும் 18 மற் றும் 19ஆம் திகதிகளில் பாராளுமன்றில் விவாதம் நடத் தப்பட ஆலோசனைகள் 11

## 70 மில்லியன் ரூபா மோசடி; நாமலுக்கு அழைப்பாணை

கொழும்பு, பெப். 06

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது .

ரக்பி விளையாட்டை ஊக்குவிப்பதற்காக இந்திய நிறுவனமான கிரிஷிடமிருந்து 70 மில்லியன் ரூபாயைப் பெற்று முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட 11

## தேங்காய் ஏற்றுமதிக்கு தடையாக அரசபடைகள்

### கேப்பாப்புலவு மக்களின் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்

### சபையில் ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

- பாலநாதன் சதீசன் -

கொழும்பு, பெப். 06

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான தெங்குப் பயிற்செய்கைக் காணிகள் உட்பட பல காணிகளை அரசபடைகள் அபகரித்துவைத்துக்கொண்டு இந்த நாட்டின் தேங்காய் ஏற்றுமதிக்குத் தடையாக இந்த நாட்டின் அரச படைகளே காணப்படுவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார். 11

### கடவுச்சீட்டு பிரச்னைக்கு தீர்வு:

## குடிவரவுத் திணைக்களத்தை 24 மணிநேரமும் இயக்க முடிவு!

கொழும்பு, பெப். 06

கடவுச்சீட்டுகளை வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்க குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தை 24 மணி நேரமும் இயக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடவுச்சீட்டுப் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள புத்திஜீவிகள் 11

## குற்றவாளிகள் சட்டத்திலிருந்து ஒருபோதுமே தப்பிக்கமுடியாது

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, பெப். 06

லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்க தயாராகவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் 11

## எம்.பிக்களுக்கு வாகனம் இல்லை!

கொழும்பு, பெப். 06

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படமாட்டாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் அதனை செய்ய முடியாது எனவும், எம்.பிக்களுக்கு வாகன பெமிற் வழங்கப்படாது எனவும் அவர் கூறினார். 11

## நெல்லுக்கு நிர்ணய விலை!

கொழும்பு, பெப். 06

நெல்லுக்கான நிர்ணய விலை விவசாயிகள் மற்றும் நுகர்வோருக்கும் நன்மை பயக்கும் வகையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் அமைச்சர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. 11

## அரச வேலை வாய்ப்புக்கு புதிய ஆட்சேர்ப்பு திட்டம்

கொழும்பு, பெப். 06

அரச சேவையில் பயன்படுத்தப்படாத பட்டதாரிகள் குழுவொன்று இருப்பதாகவும், அவர்களை இணைக்கும் புதிய திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் கீழ் தேவையான ஆட்சேர்ப்புகள் விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரச சேவைக்குள் 35,000 பட்டதாரிகளை இணைக் கும் திட்டம் தொடர்பாக, சுகாதார 11

## பாராளுமன்ற சம்பிரதாயங்கள் அரசால் மீறப்பட்டு வருகின்றன

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 06

பாராளுமன்றத்தின் சம்பிரதாயங்கள், சிறப்புரிமைகள், நிலையியற் கட்டளைகள் என சகலதும் இன்று மீறப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை!

கொழும்பு, பெப். 06

நாட்டில் தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று கூடியபோது பிரதமரிடம் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலநிலையில் ஏற்பட்ட மாற்றம், நீண்டகாலமாக உரம் பெற்றுக்கொடுக்கப்படாமை, கிருமித் தாக்கம், வனஜீவராசிகளால் ஏற்பட்ட பாதிப்பு, தேங்காய் உற்பத்திக்கு முதலீட்டாளர்கள் முன்வராமை, பரம்பரிய உற்பத்தி பிரதேசங்களில் உள்ள தென்னை மரங்கள் விளைச்சலைத் தராமை உள்ளிட்ட காரணங்களால் தேங்காய் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தேங்காய் உற்பத்திக்கான முதலீடுகளை உருவாக்குதல், உற்பத்தியாளர்களுக்கு அவசியமான நிவாரணக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுத்தல், வடக்கில் தெங்கு முக்கோணப் பகுதியை உருவாக்குதல், கிருமித் தொற்று ஏற்படுவதை உடனடியாக தடுத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், வீடுகளில் தேங்காய்களை வீண்விரயம் செய்வதை தடுப்பதற்கென விழிப்புணர்வுத் திட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது.

அதற்கமைய தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஐந்து வருட திட்டமும் பத்து வருட திட்டமும் நடைமுறைப் படுத்தப்பட வுள்ளது - என்றார்.

# மொட்டுச் சின்னம் குறித்து இறுதித் தீர்மானம் இல்லை

கொழும்பு, பெப். 06

எதிர்வரும் தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதா அல்லது வேறொரு சின்னத்தில் போட்டியிடுவதா என்பது தொடர்பில் இதுவரையில் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஒரு கட்சியாக இந்த விடயம் தொடர்பில் ஏனைய கட்சிகளுடன் இதுவரை கலந்துரையாடவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடுவதே தற்போது கட்சியின் நிலைப்பாடாக காணப்படுவதாகவும், கட்சியில் பெரும்பான்மையானோர் அந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும், எதிர்வரும் நாட்களில் இதில் மாற்றங்கள் ஏதும் ஏற்படின் அது தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவிப்பதாக கூறிய கட்சியின் பொதுச் செயலாளர், கட்சியின் முன்னாள் உறுப்பினர்களின் அடையாளங்களை பாதுகாத்து கட்சி செயற்படும் எனவும் கூறினார்.

(அ)



# மகிந்தவை சந்தித்து பேசினார் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா

கொழும்பு, பெப். 06

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்று புதன்கிழமை காலை கொழும்பு விஜேராம வீதியில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசமும் இணைந்துகொண்டார்.


(அ)

# இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக மன்னார் கொண்டுவரப்பட்ட பறவைகள்!

## மூவர் கடற்படையினரால் கைது

கொழும்பு, பெப். 06

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்ட பறவைகள் மற்றும் மருந்துப் பொருட்களுடன் மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



மன்னார் கரிசல் பகுதியில் பறவைகள் மற்றும் மர அணில்களை வாகனத்தில் ஏற்றும்போது நேற்று புதன்கிழமை அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையின் புலனாய்வு அதிகாரிகளுக்குத் கிடைத்த தகவலுக்கமைய இந்த கைது இடம் பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதன் போது 220 புறாக்கள், 20 ஆபிரிக்க கிளிகள் , 8 மர அணில்கள், பறவைகளுக் கான மருந்து பொருட்கள் மற்றும் பாதாம், பிஸ்தா போன்றவையும் இதன் போது கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும், அவர்களிடம் இருந்த பறவைகள் மற்றும் மர அணில்கள், மருந்துப் பொருட்கள் அனைத்தையும் மன்னார் பொலிஸ் நிலலையத்தில் ஒப்படைத்துள்ளதாகக் கடற்படையினர் மேலும் கூறினர்.

(அ)

# சங்காபிஷேக பெருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.06

புங்குடுதீவு - இறுப்பிட்டி அரியநாயகன் புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமான் ஆலயத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் விநாயகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேக பெருவிழாவும் மாலை விநாயகப் பெருமான் அழகிய திரு மஞ்சத்தில் வலம் வரும் திருக்காட்சியும் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் “சங்காபிஷேக பெருவிழா மகத்துவம்” பற்றி தெய்வீக பேருரையாளர் மதுரகவி. காரை. எம்.பி. அருளானந்தனின் தெய்வீக பேருரை இடம்பெறும். அத்துடன் பகல் உற்சவம், இரவு உற்சவ காலங்களில் ஐங்கரன் சனசமூக நிலைய அமுதசுரபி மண்டபத்தில் அன்னதானம், இராப்போசனம் ஆகியனவும் வழங்கப்பட வுள்ளன. ஈழத்து தவில் நாதஸ்வர கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

காலையில் இடம்பெறுகின்ற சங்காபிஷேக பெருவிழா மாலையில் இடம் பெறுகின்ற திருமஞ்ச பெருவிழா யாவும் ஓம் தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பப்படவுள்ளது.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கருத்துரை லண்டன் சிவாப்பிள்ளை கலந்து சிறப்பித்தார்





யாழ்ப்பாணம், பெப். 06

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற கருத்தரங்கில் லண்டன் சிவா பிள்ளை பங்கேற்று லண்டனில் பாடசாலைக் கல்வி முறைமை - இலங்கையின் கல்வி முறை மையுடனான ஒப்பீடு என்ற பொருளில் கருத்துரை வழங்கினார்.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வின் போது கலாசாலை முகாமைக் குழுவினரால் சிவா பிள்ளை கௌரவிக்கப்பட்டார்.

(அ)

# லசந்த படுகொலைச் சந்தேக நபர்கள் மூவரை விடுதலை செய்ய சட்டமா அதிபர் ஆலோசனை

## இன்று எதிர்ப்புப் போராட்டம்

கொழும்பு, பெப். 06

சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை சந்தேக நபர்கள் மூவரை விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று இடம் பெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை இளம் பத்திரிகையாளர்கள் சங்கம் சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு முன்னாள் ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

சட்டமா அதிபர் பதவி விலகவேண்டும்,லசந்த விக்கிரமதுங்க படுகொலை சந்தேக நபர்களை விடுதலை செய்வதன் பின்னால் உள்ள காரணங்களைப் பகிரங்கப்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ள இளம் பத்திரிகையாளர் சங்கம் நீதி கோரும் அனைவரையும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஆதரவை வழங்குமாறு கோரியுள்ளது.

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை விவகாரத்தில் சாட்சியங்களை அழித்தமை மாற்றியமை தொடர்பில் கைது செய்யப்பட்டு கடந்த 5 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் பிரதிப்பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார, பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸ சுகந்தபால இராணுவ புலனாய்வுப் பிரிவின் சார்ஜன்ட் மேஜர் உதலாகம ஆகியோரை முற்றாக வழக்கிலிருந்து விடுவிக்க சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

(அ)

# நாட்டில் ஆரோக்கியமற்ற நிலையில் காற்றின் தரம்!

கொழும்பு, பெப். 06

நாடளாவிய ரீதியில் பல மாவட்டங்களில் காற்றின் தர அளவு ஓரளவு ஆரோக்கியமற்றதாக காணப்படுவதால், இயலுமானவரை முகக்கவசங்களை அணியுமாறு அரசாங்கம் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறும் அரசாங்கம் அறிவுறுத்துகிறது.

வடக்கிலிருந்து வரும் மாசுபட்ட காற்று இவ்வாறு காற்றின் தரம் குறைவதற்குக் காரணம் என்றும், நாடு முழுவதும் காற்றின் தர அளவுகள் எதிர் வரும் நாட்களில் ஓரளவு ஆரோக்கியமற்றதாக இருக்கும் என்றும் மோட்டார் போக்குவரத்துத்துறையின் வாகன உமிழ்வு சோதனைப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது, குருநாகல், கண்டி, காலி, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் காற்றின் தரம் சற்று ஆரோக்கியமற்ற மட்டத்தில் உள்ளது.

வவுனியா, நுவரெலியா, புத்தளம், முல்லைத்தீவு, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களில் மிதமான அளவு பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.02.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வரலாற்று வாய்ப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது சுதந்திர தின உரையில், வரலாறு தங்களுக்கு தந்திருக்கும் வாய்ப்பை இழக்கத் தயாரில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். அவர் கூறுவது முற்றிலும் சரியானதுதான் - இலங்கையில் அரசியல் வரலாற்றில், ஆயுத முனையில் அதிகாரத்தை கைப்பற்ற முற்பட்டு - தோல்வியுற்ற ஓர் அரசியல் இயக்கம், இலங்கையை ஆட்சி செய்வது ஒரு வரலாற்று நிகழ்வுதான். ஆனால், ஜனாதிபதி ஓர் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் - அதாவது, வரலாறு மனிதர்களின் செயல்களை தீர்மானிப்பதில்லை, மனிதர்கள்தான் வரலாற்றை உருவாக்குகின்றார்கள். அனைத்து ஆக்கங்களும் அழிவுகளும் மனிதர்களின் செயல்களின்தான் தங்கியிருக்கின்றது. இதுதான் மனிதகுல வரலாறு.

இலங்கையின் நேற்றைய நிலையும், இன்றைய நிலையும் இலங்கையின் அரசியலை கட்டுப்படுத்த முற்பட்டவர்களாலேயே நிகழ்ந்தது, நிகழப் போகின்றது. இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் நாளில் இருந்து, கடந்த 77 வருடங்களாக இலங்கைத் தீவை ஆட்சி செய்தவர்கள் பாரபட்சத்தையும், மத மேலாதிக்கத்தையும், இன வன்முறையையும் மூலதனமாகக் கொண்டே, இலங்கையின் வரலாற்றை நிலைநிறுத்தியிருக்கின்றார்கள்.

இதற்கு மாறான ஒரு புதிய வரலாற்றை படைக்கும் வாய்ப்பு இப்போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் வரலாற்றுப் பணியாக மாறியிருக்கின்றது. அதனை சரிவர செய்வதற்காக, வரலாறுப் போக்கில் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை ஜனாதிபதியும் அவரது அரசியல் குழுவும் தவறவிடுவார்களா அல்லது இல்லையா என்பதுதான், அவருக்கு முன்னாலுள்ள சவால்மிக்க கேள்வியாகும்.

ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, இந்த நாட்டில் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை கொண்டுவருவதற்கான அர்ப்பணிப்பு மிக்க பணியை செய்தால், நிச்சயம் வரலாற்று வாய்ப்பை தவறவிடாத ஒரு ஆட்சியாளர் என்னும் பெருமை அநுரகுமார திஸநாயக்க தலையிலான அரசாங்கத்தை சேரும்தான். இலங்கையின் அரசியல் வரலாற்றில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு புரட்சிகர சகாப்தமாக மாறும். இனிவரப் போகும் தலைமுறைகள் தோறும், இன மத மற்றும் பால் பேதங்களைத் தாண்டி, தேசிய மக்கள் சக்தியின் பெயர் உச்சரிக்கப்படும்.

இது நிகழவேண்டும் என்றால், அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி உச்சரித்துவரும் இலங்கையர் என்னும் நிலைமையை நேர்மையுடனும், தூரநோக்குடனும், முக்கியமாக அரசியல் துணிச்சலுடனும் - அனைத்து மக்களையும் 'நமது மக்கள்' என்னும் நிலையில் முன்னிறுத்தக் கூடிய அரசியல் மாற்றங்கள் நிகழ வேண்டும்.

அதன் முதல் படியாக அரசியல் அமைப்பின் அனைத்து ஏற்பாடுகளும், அனைத்து மக்களையும் சரிசமமாக போய்ச் சேரும் வகையில் அரசியலமைப்பு முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். அரசியலமைப்பை அமுல்படுத்தாது இருந்து கொண்டு, வரலாற்று மாற்றம் பற்றிப் பேசுவதில் பயனில்லை ஜனாதிபதி அவர்களே!

# வள்ளுவர் தமிழராக பிறந்தமை எங்களுக்கும் பெருமைதான்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.06

வள்ளுவர் பிறந்தமையால் தமிழ் நாட்டுக்கு எவ்வாறு பெருமையோ அதேபோன்று திருக்குறள் வளாகம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளதால் யாழ்ப்பாணம் மண்ணுக்கும் பெருமை என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி மாவிட்டபுரத்தில் திருக்குறள் வளாகம் திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து, செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற மாலை நிகழ்வில் உரையாற்றும் போதே ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஏனையோரால் நினைத்துப்பார்க்க முடியாத விடயங்களை ஆறு. திருமுருகன் சாதித்து வருகிறார். தமிழுக்கும், சைவத்துக்கும் தனது வாழ்வையே அவர் அர்ப்பணித்து அரும்பணியாற்றி வருகின்றார்.

இதேவேளை, ஏனைய ஆலயங்களுக்கு முன்மாதிரியாக சமூகப்பணிகளை அவர் முன்னெடுத்து வருகின்றார். இதை ஏனைய ஆலயங்களும் பின்பற்ற வேண்டும்.

இன்று பலர் கொடையளிக்க தயாராக இருந்தாலும் நிதி மீதான வெளிப்படைத் தன்மை இன்மையால் தயங்குகின்றனர். ஆறு. திருமுருகன் மீது கொண்ட நம்பிக்கையால்தான் பலர் நிதி கொடுக்கின்றனர். ஏமாற்றுபவர்கள் நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்க முடியாது. அவர்கள் விரைவில் அழிவது இயற்கை.

மேலும், திருக்குறள் தமிழர்களுக்கு பெருமை, எந்தக் காலத்துக்கும் பொருந்தக் கூடிய நூலாக திருக்குறள் அமைந்துள்ளது. எந்தமொழி பேசுவோரும், எந்த மதத்தைப் பின்பற்றுவோரும் திருக்குறளை படிக்க முடியும். திருவள்ளுவர் தமிழராகப் பிறந்தமை எங்களுக்கும் பெருமை"- என்றார். (எ)

## வவுனியாவில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பம்

வவுனியா, பெப்.06

வவுனியாவில் பெரும்போக நெல் அறுவடை முன்னெடுக்கப்பட்டு வருவதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. விமலரூபன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் இம்முறை 60, 831 ஏக்கரில் பெரும்போக நெற் செய்கை முன்னெடுக்கப்பட்ட நிலையில் தற்போது வரை 11, 490 ஏக்கர் அளவில் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த வருட இறுதி மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் ஏற்பட்ட



சீரற்ற காலநிலை காரணமாக 2547. 5 ஏக்கர் நெற் பயிர்ச் செய்கை அழிவடைந்தது.(எ)

## பொது மன்னிப்பின் கீழ் 17 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம், பெப்.06

சுதந்திர தினமான நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 17 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். இந்திரகுமார் தலைமையில் கைதிகள் விடுவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இவர்களில் பெண் ஒருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (எ)

## சாவகச்சேரி பொலிஸ் நிலைய வருடாந்த பரிசோதனை மற்றும் அணிவகுப்பு நிகழ்வு




யாழ்ப்பாணம், பெப்.06

யாழ். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பரிசோதனை மற்றும் அணிவகுப்பு நிகழ்வுகள் கடந்த 3 ஆம் திகதி காலை நடைபெற்றன.


சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமானன் கலந்து கொண்டு பரிசோதனை நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தார்.(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெப்ரவரி - 06 வியாழக்கிழமை
குரோதி வருடம் - தை 24
நல்ல நேரம்:10.30 - 12.00
ராகு காலம்:1.30 -3.00
திதி :நவமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**இடபம்**
குடும்பத்தில் சின்ன சின்னவாக்குவாதங்கள் வந்து நீங்கும். அனாவசிய செலவுகளை குறைக் கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். கல்யாண முயற் சிகள்பலிதமாகும். உங்களால்பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். சிறப்பான நாள்.

**கடகம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில சமயங்களில் விரக்தியாக பேசுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். வியாபாரத்தில் புது முயற்சிகள் வேண்டாம்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணம் ஒன்று கிடைக்கும்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலை தீர்ப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும்.

**கும்பம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்று வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்**
கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நட்பு வட்டம் விரியும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

# மாந்தை மேற்கு விடத்தல் தீவில் 28 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு!



மன்னார், பெப்.06

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விடத்தல் தீவு குளப்பகுதியில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு தொகுதி கேரளக் கஞ்சா பொதிகளை நேற்று முன்தினம் காலை அடம்பன் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மன்னார் - அடம்பன் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விடத்தல் தீவு குளப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார் மறைத்து வைக் கப்பட்ட நிலையில் 13 பொதிகளை கொண்ட கேரளக் கஞ்சா தொகையை மீட்டனர்.

சுமார் 28 கிலோ நிறை கொண்ட கேரளக் கஞ்சா பொதிகள் இவ்வாறு மீட்கப் பட்டுள்ளன. இதன் சந்தை பெறுமதி 42 இலட்சம் ரூபாய் எனத் தெரிய வந்துள்ளது.

எனினும், சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்பட வில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# யாழ். சிறைச்சாலையில் இரத்த தான முகாம்




யாழ்ப்பாணம், பெப்.06

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இரத்த தான முகாம் நடைபெற்றது. இதில் 60 பேர் இரத்த தானம் வழங்கினர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் சீ. இந்திரகுமார் தலைமையில் இந்த இரத்த தான முகாம் நடைபெற்றது.

இதில், யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனை யின் இரத்த வங்கியினரால் குருதி சேகரிப்பு செய்யப் பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், விசேட அதிரடிப் படையினர் உட்பட பலரும் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர். (எ-05)

# "திருகணையும் திருமேனியரும்" நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், பெப்.06

கனடாவில் வசித்துவரும் சிவா முருகுப்பிள்ளையின் "திருகணையும் திருமேனியரும்" நூல் அறிமுக நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம், திருவடிநிழல், அம்மன் வீதி என்ற முகவரியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய கலை இலக்கிய பேரவையின் யாழ். மாவட்டத் திற்குரிய செயலாளர் சபா தனுஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை நம்மட முற்றம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் வெளியீட்டாளருமான கதிர் திருச்செல்வமும், அறிமுக உரையை ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தரும் எழுத்தாளருமான வடகோவை வரதராஜனும் மதிப்பீட்டுரையை வவுனியா, தர்காநகர் கல்வியியற் கல்லூரிகளின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரனும், ஏற்புரையை நூலாசிரியர் சிவா முருகுப்பிள்ளையும் ஆற்றவுள்ளனர். (எ)

# சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் வவுனியாவில் மரநடுகை முன்னெடுப்பு



வவுனியா, பெப்.06

வவுனியா சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் மர நடுகை நேற்று முன்தினம் முன்னெடுக்கப் பட்டது.

வவுனியாவின் முன்னணி தேசியப் பாடசாலையான வவுனியா மகா வித்தியாலயத்தின் மைதானத்தின் எல்லையோரங்களில் சுதந்திர தினத்தை முன்னிட்டு பயன்தரும் மற்றும் நிழல் தரும் மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன.இந்த நிகழ்வில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஆ. லோ கேஸ்வரன், சமுதாய பொலிஸ் குழு பொறுப் பதிகாரி ஹேரத், பிரதி அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், ஆசிரியர்கள், சமு தாய பொலிஸ் குழு உறுப்பி னர்கள், சாரணர் குழுக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மரக் கன்றுகளை நாட்டி வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய்க்கான மருந்துகளை வழங்க பாரிய அளவு நிதி செலவீடு

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தகவல்

கொழும்பு,பெப். 06

மருத்துவ விநியோகப் பிரிவினூடாக அரச வைத்தியசாலைகளுக்கு இன்சுலின் உள்ளிட்ட நீரிழிவு நோய்க்கான மருந்துகளை வழங்குவதற்காகக் கடந்த ஆண்டு பாரிய அளவு நிதி செலவிடப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

காலி - கராப்பிட்டிய தேசிய வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். திறைசேரியில் இருந்து வழங்கப்படும் நிதியை அதிகள வில் மருந்துகளைக் கொள்வ னவு செய்வதற்காக மாத்திரம் பயன்படுத்துவது எமது பொறுப்பல்ல.

நோயை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார். (அ)

# தேங்காய் சார்ந்த பொருட்கள் இறக்குமதிக்கு அரசு அனுமதி!

கொழும்பு, பெப். 06

தேங்காய் உற்பத்தி பற்றாக்குறையின் மத்தியில் உள்ளூர் கைத்தொழில் மற்றும் நுகர்வோருக்கு ஆதரவளிக்கும் வகையில் தேங்காய் துருவல் பொருட்கள் மற்றும் உலர் தேங்காய் துண்டுகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

சட்ட விதிகளுக்கு இணங்குவதை உறுதிசெய்து உடனடி இறக்குமதியை ஆராயுமாறு கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சுகளுக்கு அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

விவசாயத் திணைக்களம் மற்றும் தென்னை அபிவிருத்தி அதிகார சபை உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்ததைத் தொடர்ந்து, குளிர்ந்த தேங்காய் துருவல், தேங்காய் (கொப்பரா அல்லாத) தேங்காய்ப்பால், பால் பவுடர் மற்றும் உலர்ந்த தேங்காய் துண்டுகளை இறக்குமதி செய்வதற்கான வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்(அ)

# இலங்கை இராணுவத்துக்கு புதிய தலைமைத் தளபதி!

கொழும்பு, பெப். 06

இலங்கை இராணுவத்தின் புதிய தலைமைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பெப்ரவரி 9 ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில், இராணுவத் தளபதியால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 45 ஆவது பிரதி பதவிநிலை பிரதானியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க, கஜபா படைப்பிரிவில் இணைந்து பணியாற்றிய ஒரு இராணுவ அதிகாரி ஆவார்.

இவர் 1989 ஆம் ஆண்டு இராணுவத்தில் ஒரு கடேற் அதிகாரியாக இணைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நிலுவை கட்டணங்கள் காரணமாக நீர் வழங்கல் சபையின் கடன் 16 பில்லியன் ரூபாயாக உயர்வு!

கொழும்பு, பெப். 06

நிலுவையில் உள்ள நீர் கட்டணங்களைச் செலுத்தாததால், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கடன் 16 பில்லியன் ரூபாயாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டுகளில், நாடு முழுவதும் நீர் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பெறப்பட்ட கடன்களுக்கு இந்த சபை கணிசமான வட்டியைச் செலுத்தவேண்டியுள்ளதாக நீர் வழங்கல் சபையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தக் கடனை நிர்வகிக்க, தங்கள் கட்டணங்களைச் செலுத்தத் தவறும் நுகர்வோரின் நீர் வழங்கல் துண்டிக்கப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நீர் கட்டணங்களைத் திருத்த நீர் வழங்கல் சபை தயாராகி வருகிறது.

திருத்தத்தின் சதவீதம் குறித்த சபையின் சிறப்புக் குழுவின் தீர்மானம் விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# இரு முக்கிய உடன்பாட்டை எட்டுவது குறித்து ஐ.தே.க.-சஜித் தரப்பு கவனம்!

கொழும்பு, பெப். 06

எதிர்வரும் உத்தேச உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான இரண்டு முக்கிய வழிமுறைகள் குறித்து உடன்பாட்டை எட்டுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் கவனம் செலுத்தியுள்ளன.

சில உள்ளூராட்சி மன்றங்களில் கூட்டாகப் போட்டியிடுவதற்கும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்காகத் தனித்துப் போட்டியிட்டு ஆட்சியைக் கைப்பற்றும்போது ஒன்றிணைவது எனவும் இதன்போது யோசனை முன்மொழியப்பட்டதாகப் பேச்சுக்களில் பங்கேற்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் இரு கட்சிகளினதும் தலைமைகள் தொடர்ந்தும் கலந்துரையாடவுள்ளதுடன், இந்த கலந்துரையாடலைத் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், இரு தரப்பினருடைய யோசனைகள் தொடர்பில் கட்சிகளின் தலைமையுடன் கலந்துரையாடும் பொறுப்பு, கடந்த கூட்டங்க ளின் போது கட்சிகளின் பொது செயலாளர்களுக்கு அளிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2024 ஆம் ஆண்டில் 87 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வி!

கொழும்பு, பெப். 06

2024ஆம் ஆண்டில் 87 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டில் இதுவரை 13 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

தரப் பரிசோதனையில் தோல்வியடைந்த மருந்துகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது.

2024ஆம் ஆண்டில் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில் 47 மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டவை எனவும் 12 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை எனவும் ஏனைய மருந்துகள் சீனா, கென்யா, பாகிஸ்தான், ஜப்பான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்றும் கூறப்படுகிறது. (அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் திடீரென தீப்பற்றி எரிந்த பஸ்




கொழும்பு, பெப். 06

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் 75ஆவது கிலோ மீற்றர் மைல்கல் அருகில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் ஒன்று திடீரெனப் தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்த தீ விபத்து நேற்று புதன்கிழமை அதிகாலை 05.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மீரிகமவிலிருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு தீப்பற்றி எரிந்துள்ளது.

தீயணைப்புப் படையினர் இணைந்து தீப்பரவலை கட்டுப்படுத்தியுள்ளனர்.

தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (அ)

# 18 வயதுக்கு மேற்பட்டோர் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கு வாய்ப்பு

கொழும்பு, பெப். 06

18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளையும் வாக்காளர் பட்டியலில் இணைந்து கொள்வது தங்களது எதிர்பார்ப்பாகும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வாக்காளர் பதிவு நாள் என்பதால், அந்த நாளில் தாங்கள் வசிக்கும் முகவரிக்கு ஏற்ப வாக்காளரின் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளடக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பிறந்தவர்கள் 2025ஆம் ஆண்டின் பிரதான வாக்காளர் பட்டியலில் இணைவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

வாக்காளர் தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் திகதியில் 18 வயது நிரம்பியவராக இருத்தல் மற்றும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் ஆகிய இரண்டு விடயங்கள் பிரதான காரணங்களாகக் கருத்திற்கொள்ளப்படும்.

இதேவேளை, தற்சமயம் தங்களது முகவரியை மாற்றியுள்ள வாக்காளர்கள், 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலிலிருந்து தங்களது பெயரை நீக்கிவிட்டு 2025ஆம் ஆண்டுக்கான பட்டியலைப் பெயரை இணைத்துக்கொள்ள முடியும்.

இதற்கான விண்ணப்பத்தினை தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து, அதனை பூரணப்படுத்தி கிராம உத்தியோகத்தரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் தங்களது பெயரை, 2025ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொள்ள முடியும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# சைபர் பாதுகாப்புச் சட்டமூலத்தை விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை

கொழும்பு, பெப். 06

சைபர் பாதுகாப்பு சட்டமூலத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு தெரிவித்துள்ளது.

டிஜிற்றல் பொருளாதாரத்தை நோக்கி நாடு பயணிக்கும் சந்தர்ப்பத்தில் சைபர் பாதுகாப்பு தொடர்பான விதிமுறைகள் கடுமையாக்கப் படவேண்டுமென அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

இந்த சட்டத்தின் கீழ் சைபர் பாதுகாப்பு அதிகார சபையொன்று உருவாக்கப்படுமென அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களிடம் அரசு மன்னிப்பு கோரவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, பெப். 06

வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத அரசாங்கம் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக தெரியவில்லை. அதிலும் கடந்த காலங்களில் சுதந்திர தினத்தை விமர்சித்தவர்கள் தற்போது அவற்றை மேற்கொள்கின்றனர் என்றால் நாட்டு மக்களை ஏமாற்றியமைக்கு அவர்கள் மன்னிப்பு கோர வேண்டும்.

வாக்குறுதிகளை நிறைவேற்றாமையின் காரணமாக அரசாங்கத்தில் உள்ள சிலர் ஒளிந்து பிடித்து விளையாடிக்கொண்டுள்ளனர்.

நாட்டு மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வை வழங்குவதாகவே அரசாங்கம் கூறியது.

ஆனால் அந்த விடயங்களை அரசாங்கம் மேற்கொள்வதாக தெரியவில்லை. மத்திய வங்கி கொள்ளையர்கள் என்று கூறிய தரப்பினருடன் இன்று அரசாங்க தரப்பு இணைந்து செயற்படுகின்றது. நாட்டு மக்கள் இந்த விடயங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டு மக்கள் திருடர்களுடன் இணைந்து சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்காக அரசாங்கத்திற்கு வாக்களிக்கவில்லை. ஆகவே இந்த விடயங்களை நாட்டு மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.



அதே போன்று வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை என கூறி அரசாங்கம் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோர வேண் டியது அவசியமாகும்-என்றார். (அ)

## ஜனவரி மாத இறுதிக்குள் 5,000 டெங்கு நோயாளர்கள்

கொழும்பு, பெப். 06

இந்த ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் நாட்டில் சுமார் 5,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் இரண்டு டெங்கு இறப்புகளும் பதிவாகியுள்ளதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாத இறுதிக்குள் டெங்கு அதிக ஆபத்துள்ள 16 பிரதேசங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி மாதத்தில் 4,943 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில், இதில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். அதன் எண்ணிக்கை 764 ஆகும்.

மேலும், கொழும்பு மாவட்டத்தில் இருந்து 674 நோயாளர்களும், கொழும்பு மாநகர சபை பகுதியில் இருந்து 608 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

காலி மாவட்டத்தில் இருந்து 315 நோயாளர்களும், கண்டி மாவட்டத்தில் இருந்து 303 நோயாளர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 278 நோயாளர்களும், யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 201 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். (அ)

## மத்தள விமான நிலையத்தினால் வருடாந்தம் 3.2 பில்லியன் நட்டம்

கொழும்பு, பெப். 06

மத்தள சர்வதேச விமான நிலையத்தால் வருடாந்தம் 3. 2 பில்லியன் ரூபா நட்டத்தை தொடர்ச்சியாக எதிர்நோக்குவதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்த நட்டத்தைக் குறைப்பதற்கான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக பிரதி அமைச்சர் ருவான் கொடித்துவக்கு கூறினார்.

மத்தள விமான நிலையத்துக்கு வரும் விமானங்களுக்கு தரையிறங்கும் கட்டணத்திலிருந்து விலக்களிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த தீர்மானத்தின் ஊடாக 6 விமான நிறுவனங்கள் மத்தள விமான நிலையத்தில் தமது விமானங்களை தரையிறக்க இணங்கியுள்ளன.

மத்தள விமான நிலையத்தின் ஊடாக வருடாந்தம் 100,000 பயணிகள் மாத்திரமே வருகை தருவதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு அந்த எண்ணிக்கையை 200,000 அதிகரிக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

மத்தள விமான நிலையத்தைச் சுற்றியுள்ள 17 கிலோ மீற்றர் நீளமான பாதுகாப்பு வேலியும் பாவனைக்கு உகந்த நிலையில் இல்லை எனவும் ருவான் கொடித்துவக்கு கூறினார்.

விமான நிலையத்தை நவீனமயமாக்கவும் பாது காப்பை உறுதி செய்யவும் நட வடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## அரிசி ஆலை உரிமையாளர்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளது அரசாங்கம்!

### மஹிந்த அமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 06

அரசாங்கத்துக்கும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இடையில் இருந்துவரும் ஒப்பந்தம் காரணமாகவே அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை இதுவரை தெரிவிக்காமல் இருக்கிறது.

அதேநேரம் அரிசி இறக்குமதியின்போது பாரிய மோசடி இடம்பெற்றுள்ளது என முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டுக்கான பொறுப்பை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொ ள்ளப்போவதில்லை.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்து கஷ்டமான குடும்பங்களை தெரிவு செய்து 20 கிலோ அரிசி பகிர்ந்தளித்தார். அது அனைவருக்கும் வழங்கவில்லை. என்றாலும் நூற்றுக்கு 5 வீதம் தேவையற்றவர்களுக்கும் சென்றுள்ளதை ஏற்றுக்கொள்கிறேன்.

அரிசி ஒரு மணி கூட வெளிநாடுகளில் இருந்து கொண்டுவருவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

அரிசி கையிருப்பு தொடர்பில் அவருக்கு யாராவது அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ள ஆலோசனைக்கு அமையவே அவ்வாறு தெரிவித்திருப்பார்.

இதன் மூலம் அரிசி விலை அதிகரிக்கும் என அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிந்து கொண்டார்கள்.

வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யாவிட்டாலும் இறக்குமதி செய்வதாக தெரிவிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் அரிசி ஆலை உரிமையாளர்கள் சந்தைக்கு அரிசி விநியோகிப்பதை வரையறை செய்வார்கள்.

அரிசி விலை அதிகரிக்கும் என அவர்களுக்கு தெரியும்.

பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசி மற்றும் நெல்லை மறைத்து வைத்திருக்கிறார்கள்.

வரலாற்றில் இந்த முறைதான் அரிசி ஆலை உரிமையாளர்கள் பாரியளவில் இலாபமீட்டி இருக்கிறார்கள் என்பதை பொறுப்புடன் தெரிவிக்கிறேன். ஏனெனில் 200 ரூபாவுக்கு மேல் அரிசி விலை அதிகரிக்க இடமில்லை.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாகவே 4 கேள்வி கோரல்களும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

அதனால் குறைகாணவும் விமர்சிக்கவுமே இவர்கள் திறமையானவர்கள்.

ஆனால் வேலை செய்ய இவர்களிடம் திறமையானவர்கள் இருப்பதை நான் ஏற்றுக்கொள்ள ப்போவதில்லை.

அத்துடன் இறக்குமதி செய்த அரிசிகளில் அதிகமானவை வேறு வகைகளாகும்.

பாஸ்மதி அரசி இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று பயறு, உழுந்து, நிலக்கடலை கொண்டுவந்துள்ளார்கள்.

ஒரு சில பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் அவை வெளியில் வரவில்லை.

தற்போதுள்ள நிலையில் நான் விவசாய அமைச்சராக இருந்திருந்தால், எனக்கு வீட்டில் இருந்திருக்க முடியாமல் போயிருக்கும்.

பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன போன்றவர்கள் அறுவடை செய்யும் நெல்லை எனது வீட்டுக்கு முன்னால் எரித்திருப்பார்கள். அரிசி ஆலை உரிமையாளர் களுக்கு மேலும் பணம் சம்பா தித்துக்கொள்ளவே அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை தெரிவிக்காமல் இருக்கிறது-என்றார். (அ)

## பிரிட்டனிலிருந்து இலங்கை வந்துள்ள போதைப்பொருள்!

கொழும்பு, பெப். 06

இலங்கை சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் நாளாந்தம் மேற்கொள்ளும் கண்காணிப்புப் பணிகளின்போது, கொழும்பில் உள்ள ஒரு கூரியர் நிறுவனத்துக்கு அனுப்பப்பட்ட சந்தேகத்திற்கிடமான பொதியில் இருந்து போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் இருந்து இலங்கையின் கிரிபத்கொடை முகவரிக்கு அனுப்பப்பட்ட குறித்த பொதியை, சந்தேக நபர் முன்னிலையில் திறந்து பார்த்த போது, அதில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 65 கிராம் குஷ் மற்றும் 500 மில்லி லீற்றர் திரவ கொக்கெய்ன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்களின் சந்தை மதிப்பு சுமார் 13 மில்லியன் ரூபா என கூறப்படுகிறது.

சந்தேக நபர் ராகம பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என்பதுடன், சுற்றுலாத் துறையில் பணியாற்றி வருகிறார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைக்காக சந்தேக நபர் இலங்கை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டார். (அ)

## 100 சூரிய மின்னுற்பத்தி திட்டங்களை விரைவாக செயற்படுத்த நடவடிக்கை

கொழும்பு, பெப். 06

பல்வேறு காரணங்களால் தடைப்பட்டுள்ள 100 சூரிய மின்னுற்பத்தி திட்டங்களை விரைவாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு தேசிய மின் கட்டமைப்பில் 500 மெகாவாட் திறனை இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்தார்.

இவற்றில் 10 மெகாவாட் வரையிலான சூரிய மின்சக்தி திட்டங்களும் உள்ளடங்குகின்றன.

குறித்த திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான ஆவணங்களில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பல காரணங்களினால் அந்தத் திட்டங்களைச் செயற்படுத்த முடியாது போயுள்ளதாக அமைச்சர் கூறினார்.

4,000 மெகாவாட் திறன் கொண்ட 49 சூரிய மின் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

சூரிய மின்சக்தி திட்டங்களிலிருந்து ஓர் அலகு மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான விலை தொடர்பாக இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் புறக்கணித்த தரப்பு அரசுக்கு எதிராகக் கூட்டணி

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, பெப். 06

**அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது அதனை அரசியல் பழிவாங்கல் என குறிப்பிட முடியாது. மக்களால் புறக்கணிக்கப்பட்ட தரப்பினர் அரசாங்கத்துக்கு எதிராக கூட்டணியமைக்க முயற்சிக்கிறார்கள். மக்களாணையை மலினப்படுத்த போவதில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வரவு செலவுத் திட்டத்தை தொடர்ந்து கிளின் சிறீலங்கா செயற்திட்டம் சகல அமைச்சுக்கள் ஊடாக அமுல்படுத்தப்படும்.

சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்தும் பணிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஊழல் ஒழிப்பு என்பது கிளின் சிறீலங்கா செயற்திட்டத்தின் ஒரு அங்கமாகும்.

கடந்த கால ஊழல் மோசடிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட முடியாது.

சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது ஊழல் வாதிகள் அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட்டுக் கொண்டு தங்களை பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

எவரையும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்த வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாது.

ஊழல்வாதிகளை மக்கள் அறிவார்கள். அவர்களின் ஊழல் மோசடிகளையும் அறிவார்கள்.

சட்டம் அனைவருக்கும் பொதுவானதாகவும் கடந்த அரசாங்கங்களைப் போன்று சட்டத்தை தமது விருப்பத்துக்கு ஏற்ப பயன்படுத்த போவதில்லை. ஊழல்வாதிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்து கூட்டணியமைக்க முயற்சிக்கிறார்கள். தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்கப் பெற்றுள்ள ஆணையை மலினப்படுத்த இடமளிக்க போவதில்லை-என்றார். (அ)

# நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள தீர்மானம்!

கொழும்பு, பெப். 06

கடந்த அரசாங்கத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தில் பல புதிய திருத்தங்களை அறிமுகப்படுத்த தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயத்தைச் சட்டமா அதிபர் திணைக்களம் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

இந்தச் சட்டத்தின் சட்ட பூர்வமான தன்மையை சவாலுக்கு உட்படுத்தும் நான்கு அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன நீதிமன்றில் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட விதம் சட்டவிரோதமானது என்று மனுக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் சிறிலங்கா உள்ளிட்ட பல தரப்பினரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (அ)

# நீர்க் கட்டணத்தை 30 வீதம் குறைப்பதற்கு பரிசீலனை!

கொழும்பு, பெப். 06

எதிர்வரும் காலங்களில் நீர் கட்டணத்தை 10 வீதம் முதல் 30 வீதம் வரை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அண்மைய மின் கட்டண குறைப்புக்கு அமைவாக நீர் கட்டணங்களை குறைப்பது தொடர்பில் பரிசீலித்து வருவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செய்தித் தொடர்பாளர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையில், முன்மொழியப்பட்ட கட்டண குறைப்பை மதிப்பிடுவதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதன் பரிந்துரைகள் அடுத்த சில நாட்களுக்குள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைவஹ் தலைவருக்கு சமர்ப்பிக்கப்படும். அது தொடர்பான அறிக்கை கிடைத்தவுடன், அந்த விடயம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பப்படும். (அ)

# குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை சிக்கினார்

கொழும்பு, பெப். 06

சுமார் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகளினால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சென்னையில் கையடக்கத் தொலைபேசி விற்பனை வர்த்தகத்தை நடத்தி வரும் 45 வயதுடைய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்த 01 கிலோ 40 கிராம் குஷ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# கொழும்பு பேராயரை சந்தித்து ஆசி பெற்ற கடற்படைத் தளபதி

கொழும்பு, பெப். 06

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனகொட, கொழும்பு பேராயரை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றார். இந்தச் சந்திப்பின் போது, தேசிய பாதுகாப்பு மற்றும் மத நல்லிணக்கத்திற்கு கடற்படையின் பங்களிப்பைப் பாராட்டிய பேராயர் மல்கம் ரஞ்சித், கடற்படையின் எதிர்கால நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெற கடற்படைத் தளபதிக்கும் முழு கடற்படைக்கும் ஆசீர்வாதங்களைத் தெரிவித்துக் கொண்டார். (அ)

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமை ஏன்?

## எதிர்க்கட்சித் தலைவர் சபாநாயகரிடம் கேள்வி

கொழும்பு, பெப். 06

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான விசேட ஏற்பாடுகள் சட்டமூலங்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் மற்றும் பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க சபாநாயகர் தவறிவிட்டார். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் அண்மையில் கிடைக்கப்பெற்றுள்ளன என்ற தகவல்களும், தேர்தல் நடக்கும் கால அட்டவணை தொடர்பிலான விடயங்கள் கூட ஊடகங்களில் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், இந்த தீர்மானம் பாராளுமன்றத்தில் கட்டாயம் அறிவிக்க வேண்டும் என்பதுடன் முழுமையான தீர்ப்பு குறித்த நாளுக்கான ஹன்சாட் அதிகார அறிக்கையில் வெளியிடப்பட வேண்டும். ஆனால் இத்தீர்ப்பு இதுவரை அறிவிக்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்-உயர் நீதிமன்றம் சில சட்டமூலங்களை ஆராய்ந்து பரிசீலித்த பின்னர், சம்பந்தப்பட்ட தீர்ப்பை சபாநாயகருக்கு அனுப்பி வைக்கும்.

அதன் பின்னர், அடுத்து வரும் பாராளுமன்ற அமர்வின் முதலாம் நாளன்று சம்பந்தப்பட்ட அத்தீர்ப்பினைச் சபாநாயகர் பாராளுமன்றத்தில் கட்டாயம் அறிவிக்க வேண்டும்.

இந்த தீர்ப்பினை பாராளுமன்றத்தில் தெரிவிக்காமையினால் சபாநாயகராகிய உங்களினதும், பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன. இந்தத் தீர்ப்பை ஏன் சபையில் அறிவிக்கவில்லை என்று கேட்கிறோம்? ஊடகங்களில் கூட வெளியாகும் தகவல்கள் ஏன் பாராளுமன்றத்தில் முன்னமே முன்வைக்கப்படுவதில்லை என்பதில் பெரும் பிரச்னை ஏற்பட்டுள்ளது. ஒழுங்கு முறையில் காணப்படும் பிரச்சினை தொடர்பிலே நாம் இங்கு கேள்வி எழுப்புகிறோம்.

இந்த செயன்முறை சபாநாயகர் ஊடாக நிறைவுற வேண்டிய அறிவிப்புக்கு முன்னர் நாட்டிற்கு வெளியாகியமை தொடர்பிலேயே இங்கு பிரச்னை காணப் படுகின்றன. அது எவ்வாறு அறி விக்கப்பட முடியும்?-என்றார். (அ)

# வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் மியன்மார் துணை பிரதமருடன் பேச்சு

கொழும்பு, பெப். 06

இலங்கை பிரஜைகளை மீட்பது மற்றும் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான முக்கிய பிரச்னைகளை நிவர்த்தி செய்வது குறித்து வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் மியன்மார் துணைப் பிரதமர் உ தான் ஸ்வேவுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

மியன்மாரிலுள்ள இணையத்தள மோசடி மையங்களில் சிக்கியுள்ள 18 இலங்கைப் பிரஜைகளை விரைவாக மீட்டு பாதுகாப்பாக திருப்பி அனுப்புவதற்கு மியன்மார் அரசாங்கத்தின் அவசர உதவியை அமைச்சர் இதன் போது கோரியுள்ளார்.

2022 மற்றும் 2024 இற்கு இடையில், மியன்மார் 91 இலங்கையர்களை மீட்டு திருப்பி அனுப்ப உதவியது.

மியாவாடியில் கடத்தல் கும்பல்களால் சித்திரவதை மற்றும் துஷ்பிரயோகத்தை எதிர்கொண்டதாகக் கூறப்படும் மீதமுள்ள 18 இலங்கையர்களை உடனடியாக மீட்டு திருப்பி அனுப்புவதற்கு மியன்மாரின் அவசர ஒத்துழைப்பை அமைச்சர் விஜித ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

75 ஆண்டுகளுக்கும் மேலான இராஜதந்திர ரீதியில் வேரூன்றிய இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும், தேரவாத பௌத்த பாரம்பரியத்தால் ஆதரிக்கப்படும் வலுவான மக்கள் தொடர்புகளுக்கும் இரு அமைச்சர்களும் உறுதியளித்துள்ளனர். (அ)

# பொலிஸ் அதிகாரிகள் நான்கு பேர் பணிநீக்கம்

கொழும்பு, பெப். 06

பிணையில் விடுவிக்கப்பட்ட வீரகெட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகளின் பணிகளை இடைநிறுத்தப்பதில் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தில்ஷான் மதுசங்க என்ற இளைஞன் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, சுமார் 6 நாட்கள் சித்திரவதை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வீரகெட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தங்காலை குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, கும்புறுபிட்டிய பல்வேறு முறைப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் கல்கிஸை பொலிஸ் சார்ஜன்ட் ஆகியோரே இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு பொலிஸ் அதிகாரிகளையும் தலா 25,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும், தலா 5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு மாத்தறை மேல் நீதிமன்றம் ஜனவரி 27 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# கேரளக் கஞ்சா வைத்திருந்த பிரபல வியாபாரிகள் கைது!

## 5 இலட்சத்து 90,000 ரூபாய் பணமும் பறிமுதல்

கல்முனை, பெப்.06

**பெருந்தொகையான கேரளக் கஞ்சாவுடன் 2 பிரபல வியாபாரிகள் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**



அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் மறைந்திருந்த ஒரு சந்தேக நபரும் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்பர் கிரா சனசமூக வீதி முன்பாக உள்ள பகுதியில் மறைந்திருந்த மற்றுமொரு சந்தேக நபரும் கைதாகினர்.

கல்முனை விசேட அதிரடிப் படையினரின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றிற்கமைய தேடுதல் மேற்கொண்ட போது இரு சந்தேக நபர்களும் பெருந்தொகையான கேரளக் கஞ்சா மற்றும் ஒரு தொகை பணத்துடன் கல்முனை விசேட அதிரடிப்படையினர் இரு வேறு சந்தர்ப்பங்களில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 54, 62 வயதுடையவர்கள் என்றும் நீண்ட காலமாக இச்சந்தேக நபர்கள் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பிட்டிமுனை உள்ளிட்ட பகுதிகளில் கேரளக் கஞ்சாவை விற்பனை செய்தும் விநியோகித்தும் வந்துள்ளதாக கல்முனை விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைதான இருவரில் ஒருவரிடம் 7 கிலோ கேரளக் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இவர் பெரிய நீலாவணையில் கைக்கடிகாரம் விற்பனை மற்றும் திருத்தகம் வைத்திருக்கும் நபர் என்பதுடன் 4 கிலோ கேரளக் கஞ்சாவை வைத்திருந்த மற்றைய சந்தேக நபர் கல்முனை நகரில் அமைந்துள்ள பிரபல ஆடையகத்தை நடத்தி வந்தவர் என்பதும் மேலதிக விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

மேலும் சந்தேக நபர்கள் வசமிருந்து பெருமளவான கேரளக் கஞ்சா பொதிகள், ஒரு மோட்டார் சைக்கிள், 5 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் பணத்தாள்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டதுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.(எ)

# மின்சார கம்பியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் பலி

மட்டக்களப்பு, பெப்.06

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள பன்சேனை கிராமத்தில் சட்டவிரோத மின்சார கம்பியில் சிக்குண்டு குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

பன்சேனை, நல்லதண்ணி ஓடை - அடச்சகல் சந்தி பகுதியிலுள்ள விவசாய காணி ஒன்றில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கியதில் முதலைக்குடாவை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சோமசுந்தரம் சீராளசிங்கம் (வயது - 39) எனும் குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

கடந்த 3 ஆம் திகதி அதிகாலை 02. 00 மணியளவில் மூன்று விவசாயிகள் யானையை விரட்டுவதற்காக சென்று திரும்பி வரும் போது விவசாயி ஒருவர் தனது காணியில் சட்டவிரோதமான முறையில் அமைத்திருந்த யானை பாதுகாப்பு மின்சார கம்பியில் சிக்கியதில், ஸ்தலத்தில் ஒருவர் பலியானதுடன் மற்றுமொருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மரண விசாரணையை தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கொக்கட்டிச்சோலை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் கிராம உத்தியோகத்தரால் கடந்த மார்கழி மாதப் பகுதியில் ஒலிபெருக்கி மூலமும் கிராம கூட்டங்கள் ஊடாகவும் காட்டு யானைகளிடம் இருந்து பாதுகாப்புக்காக சட்டவிரோத மின்சார வேலியை அமைக்க வேண்டாம் என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கொள்ளையர்கள் மூவர் சிக்கினர் நகை உள்ளிட்ட பொருட்கள் மீட்பு

சம்மாந்துறை, பெப்.06

இரு வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகள் உள்ளிட்ட பொருட்களும் சம்மாந்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மலையடிக்கிராமம் 01 பகுதியில் கடந்த 03 ஆம் திகதியன்று வீடு உடைக்கப்பட்டு தொலைபேசி உட்பட பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக உரிமையாளர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே. டி. எஸ். ஜெயலத்தின் ஆலோசனைக்கமைய பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே. சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழு புலனாய்வு மற்றும் தேடுதல் மேற்கொண்டு 2 பேரை கைது செய்தனர்.

இவ்வாறு கைதான வீரமுனை மற்றும் மலையடிக் கிராமம் பகுதிகளைச் சேர்ந்த 2 சந்தேக நபர்கள் வசமிருந்து இரண்டு தொலைபேசிகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

அத்து டன் கடந்த ஜனவரி 26 ஆம் திகதி மையவாடி பகுதியில் வயோதிபப் பெண்ணின் வீட் டில் உள்நுழைந்து தங்க நகை மற்றும் கையடக்க தொலை பேசிகளை கொள்ளையடித்த சம்பவத்துடன் இந்த நபர்களுக்கு தொடர்புள்ளமை பொலிஸாரின் மேலதிக விசாரணையின் போது தெரிய வந்தது.

அத்துடன், சந்தேக நபர்கள் இருவர் திருட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டதாக தகவல் அறிந்த பாதிக்கப்பட்ட வயோதிபப் பெண்ணும் நேற்று முன்தினம் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த 2 சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது மற்றுமொரு சந்தேக நபரான பாண்டிருப்பு 02 பகுதியைச் சேர்ந்தவர் கைதானார்.

அத்துடன் இவர்கள் வசம் இருந்த கொள்ளையடித்த நகைகளையும் மீட்ட சம்மாந்துறை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# திருகோணமலை - கொழும்பு இடையே ரயில் சேவையை நிறுத்த வேண்டாம்

## பொதுமக்கள் கோரிக்கை

திருகோணமலை, பெப்.06

திருகோணமலை - கொழும்பு இடையே முற்பகல் 11. 30 மணிக்கு இடம்பெறும் ரயில் போக்குவரத்துச் சேவையை நிறுத்தாது மீண்டும் முன்னெடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்று 6ஆம் திகதிக்குப் பின்னர் பகல் நேர ரயில் போக்குவரத்து சேவை நிறுத்தப்படவுள்ளது. ஆசனம் ஒதுக்கப்படவில்லையென்பதால் ரயில் சேவை நிறுத்தப்படுவதாக துறைசார் அதிகாரிகள் தெரிவித்தார்.

இப்பகல் நேர சேவை கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டு ஒரு வருடமாகின்றது. இச்சேவை இன்று 6ஆம் திகதிக்கு பின் இடம்பெறாது என தெரிவிக்கப்படுகிறது.

இச் சேவை இடம்பெறாதற்கு மக்கள் பயணம் செய்வது குறைவு, ரயில் இயந்திரப் பற்றாக்குறை போன்ற காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் பகல் நேரம் ஒரு ரயில் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வருகின்றது. இச்சேவை ஆரம்பிக்கப்பட்டதனால் சுற்றுலா பயணிகளின் வருகையால் வருமானம் அதிகரித்துள்ளது. இதனால், பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் அதிக நன்மைகளைப் பெற்று வருகின்றனர்.

பகல் நேர ரயில் போக்குவரத்து சேவையை நிறுத்துகின்ற போது பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி வரும்.

எனவே, மக்களின் நலன்கருதி திருகோணமலை - கொழும்புக்கான பகல் நேர சேவையை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு புகையிரத திணைக்கள அதிகாரிகள் மற்றும் போக்குவரத்து அமைச்சரிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(எ)

# தைலாப்பொட்டி நூல் வெளியீடு





சாய்ந்தமருது, பெப்.06

கலாபூஷணம் ஏ. பீர் முகம்மது எழுதிய தைலாப்பொட்டி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 09: 30 மணிக்கு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் அரங்காக நடைபெறவுள்ளது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ. கே. எம். றிம்ஸான் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (எ)

# கிண்ணியாவில் இரத்த தானம்



திருகோணமலை, பெப்.06

கிண்ணியா மருத்துவமனை இரத்த தான வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரத்ததான முகாம் நேற்றுக் காலை 08: 30 மணியளவில் கிண்ணியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம். எச். எம். ஹனி தலைமையில் நடைபெற்றது.

இந்த இரத்ததான முகாமில் கிண்ணியா பிரதேச செயலாளர் மற்றும் பிரதிச் செயலாளர் (திட்டமிடல்), பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், எனப் பல குருதிக்கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங் கினர்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் துப்பாக்கிச் சூடு சுவீடனில் 10 பேர் உயிரிழந்தனர்

ஸ்டாக்ஹோம், பெப்.06

**சுவீடனில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.**



ஐரோப்பாவில் அமைந்துள்ள நாடு சுவீடன். இந்த நாட்டின் தலைநகர் ஸ்டாக்ஹோமில் இருந்து 200 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஒரிபுரொ நகரில் பாடசாலை உள்ளது. இந்த பாடசாலையில் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில், பாடசாலையில் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் உயிரிழந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. (ஏ)

# டில்லி சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு தொடங்கியது

புதுடில்லி, பெப்.06

இந்தியாவின் டில்லி சட்டப் பேரவைக்கு நேற்றுக் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.

இந்த சட்டப்பேரவையின் பதவிக்காலம் பெப்ரவரி 23ஆம் திகதியுடன் முடிகிறது. இங்கு மொத்தம் 70 தொகுதிகள் உள்ளன.

புதிய அரசை தெரிவு செய்வதற்காக டில்லியில் நேற்று தேர்தல் நடைபெற்றது. வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கியது. கடும் குளிர் காரணமாக வாக்குப்பதிவு தொடங்கியபோது மந்த நிலை நிலவினாலும் பின்னர் படிப்படியாக வாக்குப்பதிவு விறுவிறுப்பானது.



அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்து ஹட்ரிக் வெற்றி பெறும் முனைப்பில் களம் கண்டுள்ளது. அதேவேளையில், காங்கிரஸ், ஆம் ஆத்மி என டில்லியில் ஆட்சி அதிகாரம் கனவாகிப் போனதை மாற்றி 25 ஆண்டுகளுக்குப் பின்னர் டில்லியில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் களம் கண்டுள்ளது.

இதேவேளை, டில்லி முதல்வர் அதிஷி தனது வாக்கினை செலுத்தினார். (ஏ)

# ட்ரம்பின் நடவடிக்கைக்கு பதிலடி கொடுத்தது சீனா

## நிலக்கரி, எரிவாயுவுக்கு 15 சதவீதம் வரி

பீஜிங், பெப்.06

ட்ரம்பின் வரி விதிப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த சீனா, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி மற்றும் எரிவாயுவுக்கு கூடுதல் வரி விதித்துள்ளது.

அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பொருளாதார கொள்கைகள், வெளிநாடுகள் மீதான வரி விதிப்பு ஆகியவை சர்வதேச வர்த்தக போரை தூண்டும் வகையில் அமைந்துள்ளன.

அமெரிக்காவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளி நாடுகளான கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீத வரியும், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீத வரியும் விதித்தார்.

ட்ரம்பின் இந்த உத்தரவால் உலக அளவில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. பங்குச்சந்தைகள் கடும் வீழ்ச்சியடைந்துள்ளன. வரி விதிப்பை எதிர்கொண்ட நாடுகள், ட்ரம்பின் நடவடிக்கைக்கு எதிர்வினையாற்றத் தொடங்கின.

சீனா மீதான வரிவிதிப்பு நடைமுறைக்கு வந்துள்ளது. தற்போதுள்ள வரிகளுக்கு மேல் கூடுதலாக 10 சதவீத வரியை சீனா எதிர்கொள்கிறது. இதனால், அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக, வர்த்தக கட்டுப்பாட்டு நடவடிக்கையை சீனா தொடங்கிவிட்டது. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி மற்றும் திரவ இயற்கை எரிவாயுவுக்கு 15 சதவீத கூடுதல் வரியை விதித்துள்ளது. எண்ணெய் மற்றும் விவசாய உபகரணங்களுக்கு 10 சதவீத வரியை விதித்துள்ளது.

சீனாவின் சந்தை ஒழுங்குமுறை நிர்வாகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், விதிமுறைகளை மீறிய அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனமான கூகுள் நிறுவனம் மீது விசாரணை நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஏ)

# ட்ரம்ப் - மோடி சந்திப்பு

புதுடில்லி, பெப்.06

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் - இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இடையே எதிர்வரும் 13 ஆம் திகதி சந்திப்பு நடைபெறவுள்ளது.

இது குறித்து ட்ரம்ப் தெரிவித்தவை வருமாறு, "அமெரிக்கா, இந்தியா இடையே நல்லுறவு நீடிக்கிறது. பெப்ரவரி மாதம் இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி மாளிகைக்கு வருவார்" என்று தெரிவித்தார்.



இந்தச் சூழலில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் எதிர்வரும் 10, 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். அங்கிருந்து வரும் 12ஆம் திகதி அவர் அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் செல்கிறார். மறு நாள் 13 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை, பிரதமர் மோடி சந்தித்து பேசவுள்ளார். இந்தச் சந்திப்பு சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (ஏ)


# 25 ஆண்டில் வளர்ச்சியடைந்த பாரதம் நிச்சயம் உருவாகும்

## பிரதமர் மோடி திட்டவட்டம்

புதுடில்லி, பெப். 06

அடுத்த 25 ஆண்டுகளில் வளர்ச்சியடைந்த பாரதம் நிச்சயம் உருவாகும். இது 140 கோடி மக்களின் கனவு என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் மக்களவையில் கடந்த சில நாட்களாக நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மத்திய அமைச்சர்கள், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எம்.பிக்கள் பங்கேற்று உரையாற்றினர். இந்த விவாதங்களுக்கு பதில் அளித்து பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில் நேற்று முன்தினம் உரையாற்றினார். அப்போது,



"நாடு சுதந்திரம் அடைந்தது முதல் வறுமையை ஒழிப்போம் என்று அப்போதைய ஆட்சியாளர்கள் கூறி வந்தனர். ஆனால், வறுமை ஒழியவில்லை. மத்தியில் பா. ஜ. க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர்.

நாங்கள் பொய் வாக்குறுதிகளை வழங்குவது கிடையாது. ஏழைகள், நடுத்தர வர்க்க மக்களின் முன்னேற்றத்துக்காக உண்மையான வாக்குறுதிகளை வழங்கி வருகிறோம். அந்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றி வருகிறோம். சில தலைவர்கள் சொகுசு வீடுகளில் வாழ்வதை விரும்புகின்றனர். அவர்களின் வீடு குறித்த படங்கள், வீடியோக்கள் ஊடகங்களில் வெளியாகி பெரும் விவாதப் பொருளாகி இருக்கிறது. நாங்கள் சொகுசு வீடுகளை கட்டவில்லை. நாட்டை கட்டி எழுப்புகிறோம்.

சில அரசியல் கட்சித் தலைவர்களை போன்று நாங்கள் ஏழைகளின் வீடுகளுக்கு சென்று படம் எடுத்து விளம்பரம் தேடுவது கிடையாது. மக்களின் நலனில் உண்மையான அக்கறை செலுத்துகிறோம்"- என்றார். (ஏ)

# முதல்கட்டமாக 18,000 இந்தியர்கள் வெளியேற்றம்

வாஷிங்டன், பெப். 06

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய 205 இந்தியர்களை அந்த நாட்டு அரசு நேற்று முன்தினம் இராணுவ விமானத்தில் திருப்பி அனுப்பியது. இந்த விமானம் இந்தியாவின் பஞ்சாபின் அமிர்தசரஸில் தரையிறங்கியது.

அமெரிக்காவில் சுமார் 4 கோடியே 78 இலட்சம் பேர் சட்டவிரோதமாக குடியேறியிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதில், இந்தியாவைச் சேர்ந்த சுமார் 8 இலட்சம் பேர் அந்த நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், சட்டவிரோதமாக குடியேறிய அனைவரையும் வெளியேற்ற உத்தரவிட்டுள்ளார். முதல்கட்டமாக 15 இலட்சம் வெளிநாட்டினர் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில், இந்தியாவை சேர்ந்த 18, 000 பேர் உள்ளனர்.

# மகா கும்பமேளாவில் சிறப்பு ஏற்பாடு



புதுடில்லி, பெப்.06

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளாவில் சிரேஷ்ட பிரஜைகள் பங்கேற்பதற்காக அம்மாநில அரசு சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், தேசிய மெடிகோஸ் கூட்டமைப்பு மற்றும் அலிம்கோ ஆகியவற்றுடன் உத்தர பிரதேச அரசின் சமூக நலத்துறை இணைந்து சிரேஷ்ட பிரஜைகளுக்காக பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.


பல்வேறு முதியோர் இல்லங்களில் இருந்து வருபவர்களுக்காக 100 படுக்கைகள் கொண்ட ஆசிரமம் கும்பமேளா பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் வழிபாடு நடத்துவது உள்ளிட்ட அத்தியாவசிய பணிகளுக்கு உதவி செய்ய தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - அவுஸ்திரேலியா 2ஆவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

காலி, பெப். 06

இலங்கை - அவுஸ்திரேலியா இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று காலை 10.00 மணிக்கு காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகிறது. முதல் போட்டியில் ஏற்பட்ட படுதோல்விக்கு இலங்கை அணி பதிலடி கொடுக்குமா? இரண்டாவது போட்டியிலும் தோல்வியடைந்து தொடரை முழுமையாக இழக்குமா என்பதை பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும்.(எ)



## இந்தியா - இங்கிலாந்து முதல் போட்டி இன்று

### பும்ரா அணியில் இல்லை

நாக்பூர், பெப்.06

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து ஜஸ்பிரீத் பும்ரா விலகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 4 - 1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இன்று 6ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த நிலையில், இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொட ரிலிருந்து பும்ரா விலகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னியில் நடந்த கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவுக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. இதனால், அவர் 5 வாரங்கள் ஓய்வு எடுக்க மருத்துவர்கள் அறிவுறுத்தினர். இதற்கிடையே இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான இந்திய அணியில் பும்ரா இடம் பெற்றிருந்தார். முதல் இரு ஆட்டங்களில் அவர் ஆடமாட்டார். உடல் தகுதியை பொறுத்து 3ஆவது ஒரு நாள் போட்டியில் விளையாடுவது குறித்து முடிவு செய்யப்படும் என்று இந்திய அணி தெரிவுக் குழு தலைவர் அஜித் அகார்கர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், வருண் சக்கரவர்த்தி சேர்க்கப்பட்ட பின்னர் இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்ட அணிப் பட்டியலில் பும்ரா பெயர் இடம் பெறவில்லை. இதன் மூலம் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து பும்ரா விலகியது உறுதியாகியுள்ளது. (எ)

## பிரக்ஞானந்தாவுக்கு உற்சாக வரவேற்பு

சென்னை, பெப். 06

நெதர்லாந்தில் நடைபெற்ற டாடா ஸ்டீல் செஸ் தொடரில் இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர். பிரக்ஞானந்தா சம்பியன் பட்டம் வென்றார். இந்த நிலையில் தாயகம் திரும்பிய அவருக்கு சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது பிரக்ஞானந்தா கூறியதாவது, கடந்த 85 வருடத்துக்கு மேலாக நடைபெற்று வரும் டாடா ஸ்டீல் மாஸ்டர்ஸ் செஸ் தொடரில் வெற்றி பெற்றுள்ளேன். இந்தத் தொடரில் அதிக அளவிலான உலக சம்பியன்கள் விளையாடிய நிலையில் சம்பியன் பட்டம் வென்றது பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் உள்ளது. கடந்த ஆண்டு பாதியில் என் ஆட்டம் நன்றாக இல்லை. தற்போது 2025ஆம் ஆண்டில் முதல் தொடரிலேயே வெற்றி பெற்றுள்ளேன். இந்த தொடருக்காக நிறைய பயிற்சிகள் எடுத்து வந்தேன்- என்றார்.(எ)



## ஜேமி ஸ்மித் விலகல்



நாக்பூர், பெப். 06

இந்தியாவுக்கு எதிரான முதல் இரு ஒருநாள் போட்டிகளில் இங்கிலாந்து இளம் விக்கெட் காப்பாளர் - துடுப்பாட்ட வீரர் ஜேமி ஸ்மித் இடம் பெற மாட்டார் என தகவல் வெளியாகியுள்ளது. இந்திய அணிக்கு எதிரான ரி - 20 தொடரில் விளையாடிய ஜேமி ஸ்மித் மூன்றாவது போட்டியின் போது காயத்தை சந்தித்ததன் காரணமாக கடைசி இரண்டு போட்டிகளில் இருந்தும் விலகினார். இதைடுத்து அவருக்கு பதிலாக ஜேக்கப் பெத்தேலுக்கு வாய்ப்பு கிடைத்தது.

இந்த நிலையில், ஜேமி ஸ்மித் தனது உடற்தகுதியை எட்டாத காரணத்தால் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரின் முதல் இரு போட்டிகளில் இருந்து விலகியுள்ளார். (எ)

## அபிஷேக் சர்மாவுடன் எனக்குப் போட்டியா?




மும்பை, பெப்.06

அபிஷேக் சர்மாவுக்கும் தனக்கும் இடையே 'நச்சுப் போட்டி' எதுவும் இல்லை என்று இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் சுப்மன் கில் மறுத்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"அபிஷேக் சர்மா என் சிறுவயது நண்பன். ஜெய்ஸ வாலும் நண்பனே. எனவே, எங்களுக்கு இடையே எந்தவித நச்சுப்போட்டியும் இல்லை. நாட்டுக்காக ஆடும்போது ஒவ்வொரு போட்டியிலும் சிறப்பாக ஆட வேண்டும் என்ற உந்துதல், ஆசை அனைவருக்குமே இருக்கவே செய்யும்.

எனவே, இவர் நம்மை விட நன்றாக ஆடிவிடக் கூடாது என்றெல்லாம் நினைப்பவன் அல்ல நான். அணிக்காக, நாட்டுக்காக யார் ஆடினாலும் அவர் நன்றாக ஆட வேண்டும் என்றும் நன்றாக ஆடினால் வாழ்த்தவும் வேண்டும் என்று நினைப்பவன் நான்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான தயாரிப்புத் தொடராகப் பார்க்க முடியாது. இங்கிலாந்து மிகச்சிறந்த அணி. எனவே, ஆதிக்கத்துடன் வெற்றி பெறவே விரும்புகிறோம்"-என்றார். (எ)

## ஒருநாள் தொடரிலும் வருண் சக்கரவர்த்தி

புதுடில்லி, பெப்.06

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் வருண் சக்கரவர்த்தி சேர்க்கப்பட்டுள்ளார். இந்தியா - இங்கிலாந்து இடையிலான 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 4 - 1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இன்று 6ஆம் திகதி தொடங்குகிறது. ஒருநாள் போட்டிகள் முறையே நாக்பூர், கட்டாக், அகமதாபாத் தில் நடைபெறவுள்ளன.

இந்த ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் ரோஹித் சர்மா, விராட் கோலி, ரிஷப் பண்ட், ஷ்ரேயாஸ் ஐயர் போன்ற வீரர்கள் அணிக்கு திரும்புவதால் இந்தத் தொடர் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. முதல் போட்டி இன்று 6ஆம் திகதி நாக்பூரில் நடைபெறவுள்ளதை அடுத்து இந்திய வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.




இந்த நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர் இந்திய அணியில் வருண் சக்கரவர்த்தி சேர்க்கப்பட்டுள்ளதாக பி. சி. சி. ஐ. அறிவித்துள்ளது. இதைய டுத்து அவர் நாக்பூரில் இந்திய அணியினருடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பாக செயல்படும் பட்சத்தில் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியிலும் அவர் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. வருண் சக்கரவர்த்தி இங்கிலாந்துக்கு எதிரான ரி - 20 தொடரில் 14 விக்கெட்கள் வீழ்த்தி தொடர் நாயகன் விருது வென்றார்.(எ)

## என் தந்தையின் ஒழுக்கம் என்னுள் ஒட்டிக்கொண்டது

### எம். எஸ். டோனி தெரிவிப்பு

மும்பை, பெப்.06

"என் தந்தையின் ஒழுக்கம் எனக்குள் அப்படியே ஒட்டிக்கொண்டது. அதனால் பாடசாலைக்கு நான் ஒருபோதும் தாமதமாக சென்றது கிடையாது. அது மாதிரியான சிறு சிறு பழக்கவழக்கங்கள் வாழ்வில் முக்கியமானது" என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் எம். எஸ். டோனி தெரிவித்துள்ளார்.

மும்பையில் தனியார் பயிற்சி நிறுவனம் ஏற்பாடு செய்த மாணவர் சந்திப்பு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"விளையாட்டு துறை ஒரு எதிர்கால வாழ்க்கைக்கான வாய்ப்பாக பார்க்கப்படாத தலைமுறையைச் சேர்ந்தவன் நான் என்று நம்புகிறேன். அப்போதெல்லாம் வீட்டில் உள்ள பெரியவர்கள் தங்கள் பிள்ளைகள் படிப்பில் கவனம் செலுத்தி, வேலை பெற்று, நிலையான வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டுமென விரும்பினார்கள். விளையாட்டு துறையை ஒருபோதும் எதிர்காலமாக பார்க்காத காலம் அது.

ஆனால், அந்த விடயத்தில் நான் அதிர்ஷ்டசாலி என நினைக்கிறேன். எனது வெற்றியில் எனது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரின் பங்கும் முக்கியமானது. எனது பயிற்சியாளர்கள், நண்பர்கள் ஆகியோரது பங்கும் முக்கியமானது. குறிப்பாக எனது தந்தையின் பங்கு மிக முக்கியமானது. அவர் மிகவும் ஒழுக்கமானவர். அந்தப் பண்பு எனக்குள் அப்படியே ஒட்டிக் கொண்டது. அதனால், எனது முன்பள்ளி காலம் தொடக்கம் 12ஆம் வகுப்பு வரை பாடசாலைக்கு ஒருநாளும் நான் தாமதமாக சென்றது கிடையாது. வாழ்வில் இது மாதிரியான சிறு சிறு பழக்கவழக்கங்கள் முக்கியமானவை"- என்றார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேங்காய் ஏற்றுமதிக்கு...

இதன்போது முல்லைத்தீவு கேப்பாப்புலவில் இராணுவத்தினர் அபகரித்துள்ள மக்களின் பூர்வீகக் காணிகளில் அதிகளவு தெங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதையும், அக்காணிகளின் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த காணிகள் இராணுவத்தின் பிடியிலிருந்து உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேங்காய் ஏற்றுமதி செய்வதற்கு இடையூறுகள் காணப்படுகின்றன. குறிப்பாக வடக்கு - கிழக்கில் மக்களுக்குச் சொந்தமான காணிகளை படையினர் இன்னமும் விடுவிப்பு செய்யப்படவில்லை.

புதிய ஆட்சியின்பின்னர் வடக்கு-கிழக்கில் ஒரு சில இராணுவமுகாம்கள் விடுவிக்கப்பட்டதாக கூறப்பட்டபோதிலும் இன்றளவில் பலநூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள், மக்களின் வாழ்வாதார நிலங்கள் படையினரின் வசமே உள்ளன.

பூர்வீக நிலங்களை இழந்து அகதிகளாக இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர்களின் அரவணைப்பிலுமே இவர்களின் வாழ்க்கை கழிகின்றது.

போர் மௌனித்து பதினைந்தாண்டுகள் ஆகியும்கூட இன்னமும் அகதிகளாக நாட்டின் குடிமக்கள், தமிழ் மக்கள் வாழும் அவலநிலையை எண்ணிப்பாருங்கள். தமிழர்களை அவர்களின் வாழிடங்களிலேயே வாழவிடுங்கள்.

இவற்றில் ஒன்றாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கேப்பாபிலவு, புலக்குடியிருப்பு மக்களின் அவலநிலை இன்னும் தீர்ந்தபாடில்லை. அதிலிருந்து மீண்டவர்கள் சிலர். இன்னும் 54 குடும்பங்கள் தங்களைத் தங்களுடைய பூர்வீக இடத்தில் குடியமர்த்தமாட்டார்களா என்ற ஏக்கத்தோடு இடைத்தங்கல் முகாம்களிலிருந்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

தங்களுடைய சொந்த இடத்தில் இருந்தபோது எந்தக்குறையும் தங்களுக்கு இல்லை. வளமானபூமி, ஒரு பக்கம் ஆறு. அதனால் மீன், இறாலுக்கு பஞ்சமில்லை. தங்களுடைய காணியில் குடியிருப்பு நிலம் தவிர்ந்த மிகுதி நிலத்தில் காலங்களுக்கேற்ப பயன்தரக்கூடிய தோட்டச்செய்கை, வயல்கள், இதுதவிர தென்னைகள் தாராளமாக ஒவ்வொரு காணிகளிலும் உண்டு, இன்றைய தேங்காயின்விலை மிகமிக அதிகம். எண்ணிப்பாருங்கள் மக்கள் எவ்வளவு வேதனைப்படுவார்கள்.

இப்படி சகல விதத்திலும் தங்களின் பூர்வீக காணிகளில் பயன்பெற்று வாழ்வாதாரத்தை ஈடு செய்து வாழ்ந்து வந்த குடும்பங்கள், தற்போது மிகவும் நொந்துபோயுள்ளார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்ட 54 குடும்பங்களின் 55 ஏக்கர் நிலம் விடுபடாமல் இராணுவம் அபகரித்துவைத்துள்ளது. இதில் சில காணிகள் பலத்த நிலமீட்புப் போராட்டங்களின்பின்புதான் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டன.

அதேபோல அந்த மக்களின் பிரதிநிதியாகக் கேட்கின்றேன். 54குடும்பங்களின் காணிகளையும் விடுவிப்புச் செய்யுங்கள். பொறுப்பாக இருக்கும் அமைச்சுக்கள் இந்த மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (அ)

## உள்ளூராட்சி...

நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான சட்டமூலத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை என சபாநாயகர் நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

என்றாலும், உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் கடந்த 27ஆம் திகதியே கிடைக்கப்பெற்றுவிட்டதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## 70 மில்லியன்...

குற்றப் பத்திரிகைகளைப் பரிசீலித்த பின்னர், கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்த அறிவிப்பை வெளியிட உத்தரவிட்டார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது ஊழல் எதிர்ப்புக் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் தற்போதைய அமைச்சருமான வசந்த சமரசிங்க செய்த முறைப்பாட்டை தொடர்ந்து இந்த விசாரணைகள் நடத்தப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிதி விசாரணைப் பிரிவு முன்னர் கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பணங்களைச் சமர்ப்பித்திருந்தது .

அந்த வழக்கில் நாமல் ராஜபக்ஷ ஒரு சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ)

## எம்.பிக்களுக்கு...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போதே அமைச்சர் நேற்று இந்த தகவலை வெளியிட்டார்.

'பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகனங்களைப் பராமரிப்பதும், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவற்றை மீளப் பெறுவதும் அரசாங்கத்தின் கொள்கை. எனினும், தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையால் எம்.பிக்களுக்கு வாகன இறக்குமதி இடம்பெறாது." - எனவும் அவர் கூறினார். (அ)

## குடிவரவு...

குழுவின் விதந்துரைக்கமைய 'பி' வகைக் கடவுச்சீட்டுக்கள் 1,100,000 இனை சமகால விநியோகத்தர்களுக்கு வழங்குவதற்கான பெறுகை செயன்முறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, தற்போதுள்ள கடவுச்சீட்டு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தாமதத்தை நீக்குவதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் நடவடிக்கைகளை தொடர்ந்து 24 மணித்தியாலயங்கள் மேற்கொள்வதன் மூலம் நாளொன்றுக்கு 4,000 கடவுச்சீட்டுக்கள் வீதம் வெளியிடுவதற்கான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்குத் தேவையான மேலதிக பணிக்குழாமினரை - குறித்த திணைக்களத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை அரச சேவைகள் ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன் ஒப்பந்த அடிப்படையில் கடமையில் ஈடுபடுத்துவதன் மூலமும் தற்போது அரச சேவையில் ஈடுபடுகின்ற ஊழியர்களை பொது நிர்வாக, உள்நாட்டலுவலகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கேட்டறிந்து இணைப்புச் செய்வதன் மூலமும் ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## பாராளுமன்றில்...

கொள்வது இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்க மாகும்.

இதன் மூலம் பலமான பாராளுமன்ற நடவடிக்கைகளை கொண்டமைந்த பாராளுமன்றத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றும், அரசாங்கத்தின் சிறந்த தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பது போலவே, நாட்டு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பை வெளியிட்டு மக்கள் பக்கம் நாம் முன்நிற்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு தெரிவித்தார்.

பாராளுமன்றக் குழுக்களில் கவனம் செலுத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இங்கு சகல கட்சித் தலைவர்களும் தமது கருத்துக்களை எடுத்துரைத்து சுட்டிக்காட்டினர்.

கடந்த ஜனவரி 29 ஆம் திகதியும் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கூடி இதேபோன்ற கலந்துரையாடலொன்றை நடத்தியதோடு, நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலும் இதன் ஓர் தொடர்ச்சியாகும்.

இக்கலந்துரையாடலில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்களான கயந்த கருணாதிலக்க (எதிர்க்கட்சியின் பிரதம கொறடா) ஜே.சி. அலவத்துவல (எதிர்க்கட்சியின் பிரதி அமைப்பாளர்) அஜித் பி. பெரேரா (எதிர்க்கட்சியின் பிரதி அமைப்பாளர்) ரிஷாத் பதியுதீன், நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, தயாசிறி ஜயசேகர, ரவி கருணாநாயக்க, ஜீவன் தொண்டமான், சிவஞானம் சிறீதரன், பி. சத்தியலிங்கம், அமிர்தநாதன் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரவூப் ஹக்கீம், நிசாம் காரியப்பர், வீ.எஸ். இராதாகிருஷ்ணன் அனுராத ஜயரத்ன, டி.வீ. சானக மற்றும் காதர் மஸ்தான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

## அரச...

மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தனது கருத்துக்களை வெளிப்படுத்தி னார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடு முழுவதும் உடனடியாக நிரப்பப்படவேண்டிய பணியிடங்களுக்கான வெற்றிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிரப்பப்படும் என அமைச்சர் கூறினார். அதே நேரத்தில், 30,000 அல்லது 35,000 என நிர்ணயிக்க முடியாது இருப்பதால், பட்டதாரிகள் குழுவிலிருந்து சிலர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், மேலும் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் எனவும் அவர் விளக்கினார். (அ)

## குற்றாவளிகள்...

வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. அதன்போது ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2006 இற்கு பின்னர் தெற்கில் மாத்திரம் அல்ல வடக்கிலும் ஊடகவியலவாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த அரசாங்கத்துக்கு மக்கள் பெரும்பான்மை ஆணையை வழங்கியுள்ளனர்.

ஆகவே, அரசாங்கம் இந்த விடயங்களுக்கான நீதியை வழங்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும். மாறாக மக்கள் ஆணைக்கு புறம்பாக அரசாங்கம் செயற்படாது. நீதிமன்றம் அதற்குரிய நடவடிக்கைகளை நிச்சயம் எடுக்கும்.

கொலைகாரர்களுக்கு சட்டத்திலிருந்து தப்பிக்க ஒருபோதும் முடியாது.

எனவே லசந்தவின் கொலை விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்டுள்ள விடயம் தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

அதேபோன்று எந்தவொரு வழக்கு விசாரணைகளையும் காலம் தாழ்த்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது. தொழில்நுட்ப விடயங்கள் காரணமாகவே தாமதம் ஏற்பட்டுள்ளது. ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுக்கு நீதி கிடைக்கப் பெறும் வகையில் கட்டமைப்பு உருவாக்கப்படும் - என்றார். (அ)

## பாராளுமன்ற...

சிறப்புரிமை பிரச்னையொன்றுக்காக, சபாநாயகர், சபை முதல்வர் மற்றும் ஜனாதிபதியை சந்தித்தும் தொலைபேசி வாயிலாகவும் கலந்துரையாடினோம்.

பிரச்னைக்கு இதுவரை தீர்வு கிடைக்காத பட்சத்திலேயே சபையில் கேள்வி எழுப்புகிறோம்

நிலையியற் கட்டளைகள், சம்பிரதாயங்கள், ஒழுங்குவிதிகள் குறித்து சபாநாயகர் பேசினாலும், இந்த சம்பிரதாய ஒழுங்குகள் பின்பற்றப்படுவதில்லை.

வெளிநாட்டு தூதுவர்களுக்கு முன்னாள் பாராளுமன்ற நட்புறவுச் சங்கங்களிலும் வாக்கெடுப்பு நடத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

இது பாராளுமன்ற சம்பிரதாயம் அல்ல. முற்போக்காக நடந்து, பாராளுமன்ற குழுக்களில் எதிர்க்கட்சிக்குத் தேவையான பிரதிநிதித்துவ எண்ணிக்கையை பெற்றுத் தருமாறு கோருகிறோம்.

தற்போது கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களிலும் அடக்குமுறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கம்புறுப்பிட்டியிலும் அடக்குமுறையே நடந்தது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கூட சர்வதேச நாணய நிதியத்திற்கு எதிராக பேசியதால் அங்கும் அடக்குமுறை முன்னெடுக்கப்பட்டது.

இந்த அடக்குமுறைப் போக்குக்கு இடமளிக்க முடியாது-என்றார். (அ)

## நெல்லுக்கு...

இந்நிலையில் நெல்லிற்கான நிர்ணய விலை தொடர்பான விடயம் பாரிய பேசுபொருளாக மாறியுள்ளது. விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நன்மை பயக்கும் வகையிலான விலையையே நாம் நிர்ணயித்துள்ளோம்.அதற்கமைய ,நாட்டரிசி நெல் ஒரு கிலோவை 120 ரூபாவுக்கும்,ஒரு கிலோகிராம் சம்பா நெல் 125 ரூபாவுக்கும்,ஒரு கிலோ கிராம் கீரிச் சம்பா நெல் 132 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் நிர்ணய விலையை பார்க்கிலும் குறைந்த விலையில் நெல்லை விற்கவேண்டிய அவசியம் விவசாயிகளுக்கு ஏற்படாது. நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்யவுள்ள நிர்ணய விலையை பார்க்கிலும் அதிக விலைக்கு நெல்லை கொள்வனவு செய்ய எவரேனும் தயாராகவுள்ளார்களாயின் அதில் எமக்கு எந்தச் சிக்கலும் இல்லை.

நாம் நிர்ணய விலையை அறிவித்திருக்கும் நிலையில் எவரிடமும் நெல்லை குறைந்த விலைக்கு விற்கவேண்டாம் என விவசாயிகளுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். நிர்ணய விலைக்கு அமைய நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக நெல்லை விற்பனை செய்ய முடியும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## இந்தியாவிலிருந்து 104 கிலோ கஞ்சா படகுகளில் கடத்தி வந்த மூவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 06

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கேரள கஞ்சாவை இரண்டு படகுகளில் கடத்தி வந்த மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.



யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் யாழ்ப்பாணம், உதயபுரம் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

உதயபுரம் பகுதியைச் சேர்ந்த 24,25,27 வயதான மூன்று இளைஞர்களே கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 104 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## எம்.பிக்களின் உணவுக்கு உயர்த்தப்பட்டது கட்டணம்

கொழும்பு, பெப். 06

பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முதல் தங்களது உணவுக்காக 2000 ரூபாயை செலுத்தவேண்டும்.

பாராளுமன்றத்தில் உணவுகளின் புதிய விலை இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டது.

அதன்படி, இம்மாதத்துக்கான முதலாவது பாராளுமன்ற அமர்வு நேற்று ஆரம்பித்துள்ளதால் நேற்று முதல் பாராளுமன்றமன்ற உறுப்பினர்கள் தங்களது உணவுக்கான அதிகரிக்கப்பட்ட விலையை செலுத்த வேண்டும்.

பாராளுமன்றமன்ற உறுப்பினர்களிடமிருந்து உணவுக்காக நாளாந்தம் அறவிடப்பட்ட தொகையானது 2000 ரூபாய் வரை அதிகரிக்கப்படவேண்டும் என கடந்த 23ஆம் திகதி பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, பாராளுமன்றமன்ற உணவகத்தில் காலை உணவின் விலை 600 ரூபாயாக அதிகரிக்கப்பட்டதுடன் பகல் உணவின் விலை 1200 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது. தேநீரின் விலை 200 ரூபாய் அதிகரிக்கப்பட்டது.

இந்த புதிய விலைகள், இம்மாதம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்த திட்டமிடப்பட்டது.

## 2024 இல் 87 மருந்து வகைகள் தர பரிசோதனையில் தோல்வி

கொழும்பு, பெப். 06

2024ஆம் ஆண்டில் 87 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டில் இதுவரை 13 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

தரப் பரிசோதனையில் தோல்வியடைந்த மருந்துகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது.


2024ஆம் ஆண்டில் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில் 47 மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டவை எனவும் 12 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை எனவும் ஏனைய மருந்துகள் சீனா, கென்யா, பாகிஸ்தான், ஜப்பான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்றும் கூறப்படுகிறது.

தரச் சோதனையில் தோல்வியடைந்ததாக இந்த மருந்துகளில் சில திரும்பப் பெறப்பட்டுள்ளன. சில மருந்துகள் விநியோகிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டில் தரம் குறைந்த மருந்துகளின் பாவனையால் பல உயிரிழப்புகள் பதிவாகியிருந்ததோடு, இது தொடர்பில் 124 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. (அ)

# இலங்கையின் அபிவிருத்திக்கு ஜப்பான் தொடர்ந்தும் ஆதரவு!

### அந்நாட்டுத் துணை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 06

**இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்க தயாராகவிருப்பதாக ஜப்பான் மீண்டும் உறுதியளித்துள்ளது.**

ஜப்பானின் வெளிநாட்டு நடவடிக்கைகள் தொடர்பான நாடாளுமன்ற துணை அமைச்சர் அகிகோ இகுயினாவுக்கும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பு இலங்கை மற்றும் ஜப்பானுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் வகையில் அமையப் பெற்றிருந்தது.

சந்திப்பின்போது இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜப்பானின் தொடர்ச்சியான ஆதரவை வழங்க தயாராகவிருப்பதாக மீண்டும் உறுதியளித்துள்ளது.

கலந்துரையாடலின்போது கடந்த காலங்களில், குறிப்பாக இலங்கையின் மறுசீரமைப்பு திட்டத்துக்கும் உலக மற்றும் பிராந்திய சவால்களுக்கும் தீர்வு காணும் முயற்சிகள் தொடர்பாகவும், ஜப்பானின் ஆதரவு குறித்தும் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

கல்வியின் முக்கியத்துவம், குறிப்பாக பாடசாலை மட்டத்திலான தொழிற்பயிற்சிகள் தொடர்பாகவும் இக்கலந்துரையாடலின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலின்போது கிளீன் சிறிலங்கா நிகழ்ச்சித் திட்டம் பற்றியும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதுடன், வெளிப்படைத்தன்மையான ஆட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் சுற்றுச்சூழலை நிலையாகப் பேணுவதில் மக்களின் ஆதரவு என்பன தொடர்பாகவும் பிரதமர் இங்கு குறிப்பிட்டார். இக்கலந்துரையாடலுக்கு ஜப்பான் தூதுவர் அகியோ இசோமாட்டா ஜப்பானின் உயர் அதிகாரிகள் குழுவினரும், இலங்கை சார்பாக பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்ரி உட்பட உயர் அதிகாரிகள் குழுவினரும் கலந்து கொண்டனர். (அ)

# அர்ச்சுனா எம்.பிக்கு தலையில் பிரச்னை!

### சபையில் கூறினார் தயாசிறி

கொழும்பு, பெப். 06

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் தலையில் பிரச்னை என்றும், அவரை உடனடியாக வைத்திய சாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதையடுத்து பாராளுமன்றில் சாசலப்பு ஏற்பட்டது.

சபையில் உரையாற்றிய அர்ச்சுனா எம்.பி.

என்னை அநுராதபுரம் பகுதியில் வைத்து பொலிஸார் மறித்தனர். எனது அடையாள அட்டையை கேட்டனர். நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். என்னுடைய அடையாள அட்டை பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் தரப்பட்ட தற்காலிக அட்டை என்னிடம் உள்ளது எனக் கூறி அதனைக் காட்ட முற்பட்டும் அந்த போக்குவரத்து பொலிஸார் அதனை ஏற்க மறுத்துவிட்டார் - என்றார்.

இதனையடுத்து, குறுக்கிட்ட சபாநாயகர், அர்ச்சுனா எம்.பியைப் பார்த்து "உங்களுடைய அடையாள அட்டை பாராளுமன்ற அலுவலகத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளது. அதனை நீங்கள்தான் பெற்றுக்கொள்ள தவறியுள்ளீர்கள் என சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து மீண்டும் உரையாற்ற ஆரம்பித்த பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா,

நான் அநுராதபுரத்தில் வைத்து இடைமறிக்கப்பட்ட பின்னர், எனக்கும் பொலிஸாருக்கும் இடையில் நடந்த உரையாடலை பொலிஸார் பதிவு செய்து அதனை ஊடகங்களில் வெளியிட்டனர். பொலிஸாரின் இந்த செயல் வெட்கப்பட வேண்டிய ஒன்று.

நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற காரணத்தினால் இவ்வாறு பொலிஸார் பதிவு செய்து ஊடகங்களில் வெளியிட்டனர். இந்த பாராளுமன்றம் மற்றும் சபாநாயகர் உள்ளிட்டோர் இது தொடர்பில் வெட்கப்பட வேண்டும் - என்றார்.

இதன்போது, இடையில் குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர,

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு உரையாற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சபையைப் பார்த்தும், சபாநாயகரைப் பார்த்தும் இவ்வாறு உரையாற்று வதை



இந்த சபை எப்படி அனு மதிக்கின்றது? இங்கு பாகுபாடு இல்லை.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு தலையில் பிரச்னை - என்றார்.

இதனையடுத்து உரையாற்றிய சபாநாயகர்,

நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவானது, எனவே அது சாதாரண மனிதர் என்றாலும், எம்.பியாக இருந்தாலும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் அவ்வாறே பின்பற்றப்படும். இதில் பாகுபாடு இல்லை. அர்ச்சுனா எம்.பி. சபையில் கூறிய தகாத வார்த்தைகள் ஹன்சாட்டில் இருந்து நீக்கப்படும் - என்றார்.

எவ்வாறாயினும், சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க,

இந்த உரைகளை ஹன்சாட்டில் இருந்து நீக்குவதால் பயனில்லை என்றும், பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பிரபல யூடியூபர் என்றும், அவர் உரையாற்றும் இந்த நேரத்திலேயே அனைத்தும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டிருக்கும் என்றும் குறிப்பிட்டார். (அ)

# இவ்வருட பணவீக்கம் 2 வீதமாக இருக்கும்!

### ப்ளூம்பேர்க் எதிர்வு கூறல்

கொழும்பு, பெப். 06

இலங்கையின் பணவீக்கம் இந்த ஆண்டு 2 சதவீதமாக இருக்கும் என ப்ளூம்பேர்க் எதிர்வு கூறியுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் மறை 4 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில் ப்ளூம்பேர்க் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை பணவாட்டம் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுவதா வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த பணவாட்ட நிலைமைகள் நீண்ட காலத்துக்கு நீடிக்காது எனவும் பணவீக்கம் எதிர்வரும் மே மாதத்தில் மீட்சியடைய ஆரம்பித்து, இந்த ஆண்டு இறுதிக்குள் மத்திய வங்கியின் இலக்குடன் ஒன்றிணையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இதற்காக இலங்கை மத்திய வங்கி தற்போது பேணும் 8 சதவீத கொள்கை வட்டி விகிதம் பொருத்தமான மட்டத்தில் இருப்பதாகவும் ப்ளூம்பேர்க் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org